மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, போதிய அளவிற்குத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை வழங்கு வதற்கு அரசு ஏற்கெனவே ஆணையிட்டு இருக்கிறது; தக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே சிறந்த கோப்புகளை எழுதுவதை ஊக்கு விப்பதற்கு, அரசு ஊழியர்களுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றை வைத்திருந்தது. இருந்தாலும் கூட, இந்தப் பரிசுத் திட்டம் மாவட்ட அளவிலே யாருக்காவது ஒருவருக்கு அல்லது இரண்டு பேர்களுக்கு என்று வழங்கும் நிலைமையிருக்கிறது. எனவே, தமிழிலே கோப்புகளை உருவாக்குகிற முறையும், உத்தரவுகளை வெளியிடுகிற முறையும், அரசு ஊழியர்கள் மத்தியில் ஊக்குவிப்ப தற்காக வட்ட அளவிலே என்று எடுத்து, வட்ட அளவிலே கூட ஒவ்வொரு துறைக்கும் பரிசு கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கிற திட்டத்தை அரசு செயற்படுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் வட்ட அளவிலே ஏற்கெனவே செம்மையாக செயற்பட்டு வருகிற காரணத்தால் அதற்கு மேற்பட்ட அளவிலே இந்த ஊக்குவிப்பு தேவை என்ற கருத்தை தமிழ் வளர்ச்சி பண் பாட்டுத் துறை கூறியதையொட்டித்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையையும் அரசு ஆயும்.

மானாமதுரை அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

522—(*வினா எண். 6617) திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரையிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1987 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளி 1986-87 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போடுகிறபோது, இந்த உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, பள்ளி துவங்கி, பெரிய விழாவும் நடந்துவிட்டது. அது தவிர, ரூ. 1.6 லட்சம் பணம் கொடுத்து, புதிய கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. நன்கொடையாளர்கள் இரண்டு பேர்கள் 60 ஆயிரம் ரூபாய்ச் செலவில் இரண்டு புதிய கட்டிடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அது அமைச்சருடைய வருகைக்காக காத்துக்கொண்டு இருக்கிறது. அங்கே இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ் இருக்கிற காரணத்தால், வருகின்ற ஆண்டில், ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பைத் துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் குறித்து அரசு ஆயும்.

இரண்டாவது வகுப்பு மற்றும் உதவி நீதிபதிகளுக்கு ஊர்திகள் வழங்கல்

523—(*வினா எண். 9566) **திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது வகுப்பு நீதிபதிகள் மற்றும் உதவி நீதிபதிகளுக்கு ஊர்திகள் அல்லது ஸ்கூட்டர்கள் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.